REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 24உ புதன் (6—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 25உ வியாழன் (7—4—55) [இதழ் 252

பாலாறு தண்ணீர் தகராறு

சென்னை, ஏப். 5—

பாலாற்றுத் தண்ணீரை, மைசூரும் சென்னை மாநிலமும், தங்களுக்கிடையே நியாயமான முறையில் பகிர்ந்துகொள்ள இரு சாராருக்கும் பொதுப்படையான வழிகள் காண்பிக்க, மேற்படி இரண்டு மாநிலங்களையும் சேராதவர்களைக்கொண்ட குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கோரி சென்னை மாநில சர்க்கார் கடிதம் அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்போது, மத்திய சர்க்காரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப் படுகிறது என்று அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருக்கிறார்.

சென்னை மந்திரிசபையில் பிளவு?

டெல்லி ஆதிபத்தியத்திற்கு எதிராக கன்னடத்தில் போர் முழக்கம்

'தென்னாடு அலட்சியப்படுத்தப்படுகிறது'

மத்திய ஆட்சி மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்கிறது'

★

பெங்களூர், ஏப். 4—

"இரயில்வே போக்கு - வரத்து அபிவிருத்தியில், தென்னிந்தியா பூராவின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

"இந்திய அரசாங்கம் இப்படி ஏன் ஒரு மாற்றாந்தாய் மனப்போக்கான கொள்கையைக் கடைப்பிடிக்கிறதோ, எனக்குத் தெரியவில்லை,"

—என்று, மைசூர் சட்டசபையில் வி. எம். மாஸ்கரன்ஹாஸ் என்ற உறுப்பினர் முழங்கியிருக்கிறார்.

சட்டசபையில், மைசூர் மாநிலத்தில் உள்ள சாமராஜ நகருக்கும் சென்னையில் உள்ள ஈரோடுக்கும் இடையில் ஒரு இரயில்பாதை அமைக்குமாறு மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும் என்ற அதிகாரப் பற்றற்ற தீர்மானம் ஒன்றை பி. நாச்சையா என்பவர் கொண்டு வந்தார்.

தீர்மானத்தின் மீது பேசிய பலரும் வடநாட்டு ஆட்சியாளர்கள், தென்னாட்டு மக்களின் கோரிக்கைகளைப் புறக்கணித்து வருவதாயும், மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்து கொள்வதாயும் குற்றஞ் சுமத்தினர்.

தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

விவாதத்திற்கு பதிலளித்த முதன் மந்திரி அனுமந்தையா, தீர்மானத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்வதாயும், தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டிருப்பது தன் கைகளைப் பலப்படுத்தியதாகும் என்றும் கூறியிருக்கிறார்.

மேலும், தென்னாட்டு மக்களின் தேவைகளை வடநாடு புறக்கணிக்கிறது என்ற கருத்து உட்பட அங்கத்தினர்கள் அறிவித்த எல்லாக் கருத்துக்களையும், யூனியன் அரசாங்கத்திற்குத்தான் தெரிவிப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

"இப்போதுள்ள இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி எனது நண்பர்; மாகாணப் பித்துக் கொண்டவரல்ல; பரந்த மனம் கொண்டவர்; ஆகவே அவரிடம் விஷயங்களைத் தெளிவாகக் கூறி ஆவன செய்யுமாறு கேட்கிறேன்," என்றும் முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய பி. நாச்சையா, "எத்தனையோ முறை எடுத்துக் காட்டியும், தூது சென்றும், யூனியன் அரசாங்கம் இந்தத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளாதது வருந்தத்தக்கது," என்று குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானும் பங்கு பெறுகிறது

கராச்சி, ஏப். 4—

துருக்கி - ஈராக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில், அந்த நாடுகள் அழைப்பின்பேரில் சேர்ந்து கொள்ள பாகிஸ்தான் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானின் இந்த முடிவு; அரேபிய பாதுகாப்பு ஒப்பந்தத்தினை குறுக்கிடுவதாகும் என்று கூறி எகிப்து கண்டித்திருக்கிறது

பிரிட்டன்கூட, துருக்கி-ஈராக் ஒப்பந்தத்திற்கு உட்பட்ட ஒப்பந்தம் ஒன்றை, ஈராக்குடன் செய்து கொண்டுள்ளது.

இங்கிலாந்தின் இணையற்ற பிரதமர் சர்ச்சில் ஓய்வு பெறுகிறார்

ஈடன் உயர்கிறார்!

லண்டன், ஏப். 5—

இங்கிலாந்து நாட்டின் பிரதமர் சர். வின்ஸ்டன் சர்ச்சில் இன்றுமுதல் தமது பிரதமர் பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறுகிறார்.

இரண்டு பெரும் உலகப் போரினைக் காணும் வாய்ப்பும், சுமார் 55 வருட கால பொது வாழ்க்கை அனுபவமும் கொண்ட சர்ச்சில், உலகத்தின் மிகச் சிறந்த அரசியல் வாதிகளுள் ஒருவராயும், ராஜதந்திரியாயும் கருதப்படுபவர்.

இன்று காலை அவர், இங்கிலாந்து ராணியைச் சந்தித்து, தனது ராஜிநாமாவைத் தாக்கல் செய்தார்.

மிகவும் மகிழ்ச்சியோடு அவர் பிரதமர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இங்கிலாந்து நாட்டின் சரித்திரத்தில், குறிப்பாக, இந்த நூற்றாண்டின் சரித்திரத்தில், சர்ச்சில் மிகப் பெரியதொரு இடத்தைப் பெறுவார் என்பது உலகறிந்ததே.

"'உலகமே ஆயுதபாணியாக திரண்டெழுந்து இங்கிலாந்தினைத் தாக்கினும், அந்தத் தாக்குதலை முறியடிக்கும் வன்மை கொண்டவர் நாங்கள்' என்று உலகப் பெரும்போரின்போது முழங்கிய வீரன்; வெற்றிமாலை சூடிய தீரன்" என்று இங்கிலாந்து மக்கள் அவரைப் புகழ்கின்றனர்.

சர்ச்சில் இப்போதுதான் தனது 80-ம் வயதை எட்டிப் பிடித்தார். என்றாலும், இன்னும் அவர், உள்ளத்தால் இளைஞராகவே இருப்பதாக, மக்கள் எண்ணுகின்றனராம்.

அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொண்டாலும் தொடர்ந்து, மக்கள் சபை உறுப்பினராக இருப்பார் என்றும், நாட்டில் மிக முக்கியமான பிரச்சனைகள் எழும்போது, தனது கருத்தறிவிப்பார் என்றும், அவரது முதிர்ந்த அரசியல் அனுபவம், எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டியாயிருக்கும் என்றும் இங்கிலாந்து நாட்டு மக்கள் நம்புவதில் வியப்பொன்றுமில்லை.

மொத்தத்தில் சர்ச்சில், எட்டு வருடம் ஏழு மாதம் 25 நாட்கள் பிரதமராகப் பதவி வகித்திருக்கிறார். இதில் இரண்டாம் உலகப் போரின்போது, இங்கிலாந்தின் மகத்தான தலைவராக யுத்தகால பிரதமராக 5 வருடங்கள் பணி புரிந்ததும் உள்ளடங்கியுள்ளது.

★

ஈடன் பிரதமராகிறார்

சர்ச்சில் பிரதமர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை ஒட்டி, இதுவரை வெளிநாட்டிலாகா மந்திரியாயிருந்த சர். அந்தோனி ஈடன் முதன்மந்திரியாக நியமனம் பெற்றிருக்கிறார்.

55 வயதுடைய ஈடன், வெகு நாட்களாக சர்ச்சிலின் 'வாரிசு' என்றும், 'வலது கரம்' என்றும் வர்ணிக்கப்பட்டவர்.

இங்கிலாந்து ராணியிடம் தனது விலகல் கடிதத்தைத் தந்தபோதே, சர்ச்சில், ஈடனின் பெயரை தனது பதவிக்கு சிபாரிசு செய்

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசர்-நிதி மந்திரி சுப்பிரமணியம் உள்ளடிப் போராட்டம்

கல்விக் கொள்கையில் கருத்து வேறுபாடு!

(நமது தனி அரசியல் நிருபர்)

சென்னை, ஏப். 6—

காமராசர் தலைமையில் உள்ள சென்னை காங்கிரஸ் மந்திரி சபையில் பிளவும், கல்விப் பிரச்சினையில் கருத்து வேறுபாடும், நிதி மந்திரிக்கும் முதன் மந்திரிக்குமிடையில் இந்தப் பிரச்சினையில் உள்ளடிப் போராட்டமும் இருந்து வருவதாக நமது தனி நிருபர் தகவல் சேகரித்திருக்கிறார்.

முதன் மந்திரியான காமராசர், ஆதாரக் கல்வி, 10 அல்லது 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போதிக்கப்படக் கூடாது என்று கருதுபவராகவும், கல்வியில் செய்யப்படுகிற எந்த ஒரு சீர்திருத்தமும் அவசரப்பட்டு செய்யப்படக்கூடாது—தகுந்த ஆலோசனைக்குப் பிறகே செய்யப்பட முடியும் என்ற கருத்துக்கொண்டவராகவும் இருக்கிறார் என்பதற்கு, காமராசர் இரு வாரங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் குறிப்பிட்டதை நமது நிருபர் கீழே தருகிறார்:—

"அவ்வப்போது சர்க்கார் மாறுகிறபோது, கல்வி முறையிலும் திடீர் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று கூறப்பட்டது; கல்வி விஷயத்தைப் பொறுத்த வரையில் உங்களுக்கு நல்ல அனுபவம் உண்டு; அப்படிப்பட்ட நல்ல அனுபவங்கள் உடைய உங்களை ஒன்றும் கேட்காமல் சர்க்கார் எதுவும் செய்துவிடாது.

"குழந்தைகளுக்கு எவ்வித கல்வி தேவை என்பது பற்றி உங்களுக்குத்தான்—அக்குழந்தைகளின் பெற்றோரைவிட—நன்றாகத் தெரியும்; எனவே, 'திடீர் மாற்றங்கள் செய்யப்படும்' என்ற அச்சமே உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை."

—இவ்வாறு, சென்ற திங்கள் 27-ந் தேதியன்று மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற சென்னை மாநில ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர் நிர்வாகிகள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"கல்விப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நாம் கவனமாகவே இருக்க வேண்டும்; தொழிற் கல்வி மிகவும் அவசியமானதுதான்—ஆனால், அக்கல்வி பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத்தான் அளிக்கப்பட வேண்டுமே தவிர, 5 முதல் 10 வயது வரை உட்பட்ட குழந்தைகட்கு அவசியமில்லை. அவர்களெல்லாரும், எழுத, வாசிக்கக் கற்றுக்கொண்டால் மட்டும் போதுமானதாகும். ஐந்து வயதுடைய சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத் தொழிற் கல்வியைப் புகட்டினால் அவர்களைப் பிஞ்சிலேயே பழுக்க வைப்பதுபோலாகும். இவைபோன்ற கல்வியாயிருக்காமல் நமது கல்வித் தரம், 'நல்ல முறை'யில் இருக்க வேண்டியது மிக அவசியமாகும்," என்றும் மேலும் அவர் கூறினார்.

ஆனால் கல்வி மந்திரியாயிருக்கும் நிதியமைச்சர் சுப்ரமணியமோ, எப்படியேனும், தனது 'குருநாதர்' ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டத்தை —'ஆகாது' என்று ஆசிரியர் பலர் தீர்ப்புக் கூறிவிட்ட ஆதாரக் கல்வித் திட்டம் என்ற போர்வையில் வரும், நடைமுறை பள்ளிக்கூட ஆண்டிலிருந்து புகுத்திவிட துடியாய்த் துடிக்கிறாராம்.

அவரது அவசரம் எத்தகையது என்பதற்கு மதுரையில் அவர் பேசியவற்றைச் சாட்சிக்கழைக்கிறார் நமது தனி நிருபர்.

"மனிதன் தனது இலட்சியத்தை அடையவோ, அல்லது தனது வாழ்க்கையில் எதிர்நோக்கியிருக்கும் பல அம்சங்களையும் சமாளிக்கவோ, வெறுமனே படிக்கவும், எழுதவும் தெரிந்தால்மட்டும் போதாது; சர்க்கார், இளைஞர்களின் நல்ல இயற்கை அறிவையும், பண்பாட்டையும் வளர்க்கும் கல்வித் திட்டம் ஒன்றினை வகுக்க ஆலோசித்து வருகிறது.

"எந்த ஒரு திட்டமும் 'நல்லதா—கெட்டதா?' என்பதைத் தெரிந்துகொள்ள 'அதன் ஆதரவாளர்கள் தொகை பெரிதா—குறைவா?' என்பது அல்ல பிரச்சினை. வருங்கால கல்வித் திட்டம், மாணவரிடையே ஒற்றுமை, நேர்மையை உருவாக்கி வளர்த்து, நாட்டின் நலனுக்கு வழிசெய்வதாக அமைய வேண்டும். மாணவர்களுக்கான கல்வியைப் புகுத்துமுன், அவர்களின் தனிப்பட்ட அறிவுத் திறனை உணர்ந்துகொள்ள முயல வேண்டும்."

—இவ்வாறு, சென்னை மாநில கல்வி மந்திரி கனம் சுப்பிரமணியம், மதுரையில், சௌராஷ்டிர உயர்நிலைப் பள்ளியின்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணுதுரை
சென்னை 6—4—'55 புதன்

டெல்லியின் சூழ்ச்சி!

"பலமொழி பேசும் மக்களையும் ஒன்ருகச் சேர்த்து ஒருவரை ஒருவர் மோதிக்கொள்ளச் செய்து, இரட்டை ஆட்சி நடத்துகின்றனர், வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள்.

"இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் பலமொழி பேசும் மக்களும், மொழிவாரியாகப் பிரிந்து, தத்தமக்கென மாநிலங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்; ஒரு மொழி பேசும் மக்கள், வேருெரு மொழி பேசும் மக்களுடன் ஒன்ருகச் சேர்ந்து வாழவிடக் கூடாது; அப்படி வாழச் செய்வதால் இரு சாராரின் நலன்களும் பாதிக்கப்படுகின்றன; வெள்ளை ஏகாதிபத்தியம், தன் ஆதிக்கப் பிடிப்பு ஆட்டங் காணுமலிருக்க, இவ்வாறு, பலமொழி பேசும் மக்களையும் ஒரே மாநிலத்தில் இணைத்து, அவர்களுக்குள் குரோதத்தையும், விரோதத்தையும் வளர்த்து அவர்களிடை சுதந்திர ஆர்வம் அரும்பாமல் செய்துவிட சதி செய்திருக்கிறது; இந்தச் சதிச் செயலை இந்திய மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்; இதனை முறியடிக்க, இந்தியாவில் மொழிவாரியாக, எல்லைகள் கொண்ட மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும்," என்று, 'சுதந்திர சேனை' திரட்டிய காலத்தில் வானளாவ கூவினர் காங்கிரசார்.

மக்களிடையே, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கெதிரான சுதந்திர ஆர்வத்தை வளர்க்கவும், இந்த மொழிவழி ஆட்சிக் கோரிக்கையை வலியுறுத்தித் தீர்மானமும் நிறைவேற்றினர் அவர்கள்.

'இந்தியா மொழிவாரியாகப் பிரிக்கப்பட வேண்டும்' என்று மக்களிடையே முதன் முதலில் கூறிய அதே காங்கிரஸ் கட்சியினர்தான், இன்று பல்வேறு மாநில ஆட்சிகளிலும், மத்திய ஆட்சியிலும் பொறுப்பேற்றிருக்கின்றனர்.

உண்மையிலேயே, 'மொழி வழி மாநிலங்கள் அமைவதே, நடைமுறையில் ஜனநாயகம் இடம் பெறுவதற்கு வழி' என்பதை காங்கிரஸ்காரர்கள் உணர்ந்தவர்களாயிருந்திருந்தால், ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே இல்லாவிடினும், 'அரசியல் சட்டம்' ஒன்றை உருவாக்கிக் கொண்ட நேரத்திலாயினும், தாங்கள் முன்பு கூறியவற்றை நிறைவேற்ற முன்வந்திருக்க வேண்டும்.

ஆனல், ஜனநாயக வளர்ச்சி குறித்தோ, அல்லது தாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய நாணயம் குறித்தோ காங்கிரஸ்காரர்கள் அக்கரை கொண்டிருக்கவில்லை என்பதை, அவர்களின் இந்த ஏழரை ஆண்டுக்கால ஆட்சி முறையும், போக்கும் நாட்டவருக்கு நன்ருக விளக்கி வருகின்றன என்பதை நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி வந்திருக்கிருேம்.

மொழிவழி மாநிலங்கள் அமைக்கத் தவறியது மட்டுமின்றி, தாங்கள் முன்பு கூறியதற்கு மாருக, 'மொழிவழிப் பிரிவினை, இந்தியாவின் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் சீர்குலைக்கும்' என்றுவேறு உபதேசமும் புரிய ஆரம்பித்தனர்; இன்னும் தொடர்ந்து அவ்வாறே பேசியும் வருகின்றனர்.

ஆனல், அவர்களது 'இந்தியாவின் ஒற்றுமை' என்ற உபதேசம், அவர்களாலேயே எழுப்பப்பட்ட 'மொழிவழி மாநிலம் தேவை' என்ற மக்களின் ஆர்வத்தைத் தணித்துவிட இயலாததாகிவிட்டது!

மொழி வழி ஆட்சிக் கோரிக்கை வலுக்க ஆரம்பித்தது.

ஆந்திரம் உருப் பெற்றது; டெல்லி ஆட்சியாளர் உடனே, ஆந்திர மாநில அமைப்பை ஒட்டி, மக்களிடையே, மொழி வழி மாநில அமைப்புக் கோரிக்கை மேலும் வலுத்துவிடக் கூடும் என்று எண்ணி, 'மாநில புனரமைப்புக் குழு' என்ற பெயரில் ஒரு குழுவினை நிறுவி, மக்களின் கண்ணில் மண் தூவ முன்வந்தனர்.

'இந்தியத் துணைக் கண்டம், மொழி வழி மாநிலங்களைக் கொண்ட ஒரு அரசியல் அமைப்பாக இருக்கவேண்டும்' என்ற நல்லெண்ணத்துடன் தான், அக்குழு நியமிக்கப்பட்டது என்று எவரும் துணிந்து கூறிவிட முடியாது.

நியமனம் பெற்ற குழு உறுப்பினர்களிலே இரண்டொருவர், ஏற்கனவே மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கைக்கு மாறுபட பகிரங்கமாகப் பேசியவர்கள். மேலும், குழுவில் இடம்பெற்ற பின்னராவது, தங்களுக்குத் தரப்பட்ட பொறுப்பின் நடுநிலை காப்பாற்றப்படவேண்டுமென்று கருதியேனும், மொழிவழி மாநில கோரிக்கை குறித்து கருத்தறிவிக்காமலிருந்திருக்க வேண்டும்.

இத்தகைய 'நியாவான்களை'க் கொண்ட குழு, தருகிற சிபாரிசுகள் எப்படி மக்களின் விருப்பத்தினை நிறைவேற்றுவனவாக இருக்கமுடியும்?

மேலும் குழுவினர் இதுவரை பொதுமக்களிடை நேரடியான தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

இந்த விபரங்களையும், குழுவினரின் 'நல்லெண்ணம்' பற்றியும், அம்பாலாவில் நடைபெற்ற மூன்ருவது மொழிவழி மாநில அமைப்பு மாநாட்டுத் தலைவர் டாக்டர் லக்ஷ்மசுந்தரம் தனது தலைமையுரையில் குறிப்பிட்டுக் கண்டித்திருக்கிருர்.

மேலும் அவர், "இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இந்தியா மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்படும் என்று, இந்தியப் பேரரசு அறிவிக்கவேண்டும்; மேலும் பிரச்சினையை ஒத்திப்போடுவது, நாடு முழுவதும் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு அடிகோலுவதாகும்," என்றும் எச்சரித்திருக்கிருர்.

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் முழுவதையும் அப்படியே நியாயமானவை எனக் கொள்வதோ, அல்லது, அவை குறித்து, சாவதானமாக நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று மொழிவழி ஆட்சிக் கோரிக்கையை ஒத்திப்போடுவதோ, நியாயமானதல்ல. அப்படிச் செய்தால், நாட்டில் மகத்தான கிளர்ச்சிகள் தோன்றும் என்று கூறுவதும் ஆச்சரியப்படக் கூடியதல்ல.

ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட்டதுமே, சென்னையில் உள்ள கன்னட, கேரளப் பகுதிகளும் பிரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் இணைக்கப்பட்டிருந்தால், இதர மாநிலங்களில் உள்ள தமிழ்ப்பகுதிகளும் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட்டிருந்தால் சென்னை மாநில ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி அரியாசனம் ஏறுவதை எவரும் இன்று ஆட்சேபம் கூற முடியாதே? அந்த நிலை ஏற்படாததினுல்தானே சட்டசபையில் தமிழ் உறுப்பினர்களும் அமைச்சர்களும் தமிழில் பேசும்போது, மலையாள, கன்னட உறுப்பினர்கள் குறைபட்டுக் கொண்டு, ஒருவருக்கொருவர் மன வேற்றுமையை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது?

இப்படி, ஒரு மொழி பேசும் மக்கள் மற்ருெரு மொழி பேசும் மக்களுடன் — குறிப்பாகத் திராவிட இன மக்கள், ஒருவருக்கொருவர் மன வேற்றுமையை வளர்த்துக்கொண்டு தம்மிடையே ஒற்றுமையற்றிருந்ததால்தான், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் தங்குதடையின்றி நடைபெற முடியும் என்று டெல்லி ஆட்சியாளர்கள் கருதுகிருர்கள்; 'மொழிவழியாக, மாநில ஆட்சிகள் அமைய வேண்டும்' என்ற கோரிக்கையை அலட்சியம் செய்கிருர்கள் என்று நாம் குற்றஞ் சுமத்தினுல், அது தவறுடையது என்று சொல்லிவிட முடியுமா?

பயிற்சி முடியுமுன்பே மணம்மேற்கொள்ளும் மாணவர்

சிகாகோ, ஏப். 4—

'அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் இதற்கு முன்னிருந்ததையும் விட இப்போது பெரும்பாலான மாணவர்கள், தங்கள் பயிற்சி முடியுமுன்னரே மணம் செய்து கொள்கின்றனர்' என்று அமெரிக்காவிலுள்ள லூயிஸ் வில் பல்கலைக் கழகத்தின் டைரக்டரான திருமதி ஹில்டா அம்மையார் கூறியிருக்கிருர்.

தற்போதுள்ள கணக்கு விவரப்படி அமெரிக்காவில் 70 சத விகிதத்தினர் 20 முதல் 24 வயதுக்கிடையிலேயே திருமணம் செய்து கொள்ளுகின்றனர் என்றும், ஏறத்தாழ அரை நூற்ருண்டுக் காலத்திற்கு முன்னுலிருந்ததை விட இத்தொகை 20 சத விகிதம் அதிகமானதென்றும் அவ்வம்மையார் தெரிவித்துள்ளார்.

"'படிக்கும் காலை திருமணம் செய்து கொள்ளுவோர் கல்லூரியினின்றும் நீக்கப்படுவர்' என்ற விதி தெரிந்திருந்தும்கூட, பெண் மாணவிகள், தங்கள் கல்லூரிப் படிப்பைத் துவக்குவதற்குள் முன்ஏற்பாடாக தங்கள் தங்கள் துணைவர்களைத் தாங்களே தேடிக் கொள்கின்றனர்" என்றும் அவர் கூறினுர்.

பிரிட்டிஷ் உருக்குத் தொழில் நிபுணர் குழு

இந்திய சர்க்காருடன் உரையாடல்

புதுடில்லி, ஏப். 4—

பிரிட்டிஷ் உருக்குத் தொழில் நிபுணர் குழுவுடன், இந்தியப் பேரரசின் பிரதிநிதிகள் இன்று பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

சர். எரிக்கோட்ஸ் என்பவரின் தலைமையில் வந்துள்ள அந்த நிபுணர் குழுவை இந்திய அரசாங்க சார்பில் மந்திரிசபை காரியதரிசி வரவேற்ருர்.

இந்த குழுவினர் முதன் முதலில் மேற்கு வங்கத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது பற்றிப் பேசினர் என்று தெரிகிறது.

பிறகு மத்திய வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியையும் சந்தித்து உரையாடியிருக்கின்றனர்.

இந்த பிரிட்டிஷ் நிபுணர் குழுவின் ஆலோசனைப்படி, உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டத்தின் முழுப் பொறுப்பும் திரு. டி. டி கே. வசமே விடப்பட்டுள்ளதாம்.

வெள்ளக் கட்டுப்பாடு

மத்திய அரசாங்கம் ரூ. 10 கோடி ஒதுக்குகிறது

புதுடில்லி, ஏப். 4—

பல மாநிலங்களும் தீட்டியுள்ள, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குக் கடன் கொடுத்து உதவுவதற்காக, இந்தியப் பேரரசு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கியுள்ளதென்று தெரிகிறது.

ஆந்திரா, அசாம், பீகார், ஜம்மு, காஷ்மீர், ஒரிசா, மேற்கு வங்கம், பெப்சு, பஞ்சாப், உ. பி. ஆகிய மாநிலங்களில் வெள்ளக் கட்டுப்பாடு, 'போர்டு'கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகள் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான திட்டங்களை வகுத்துள்ளன என்று திட்ட மந்திரி நந்தா மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிருர்.

தரத்தை உயர்த்தப் போகிருர்களாம்

புதுடில்லி, ஏப். 4—

அகில இந்திய வானெலி நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்தவும், பல ரகமான நிகழ்ச்சிகளை ரேடியோவில் இணைக்கவுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக டெல்லி மக்கள் சபையில், செய்தி, ஒலிபரப்பு இலாகா அமைச்சர் டாக்டர் கேஸ்கர் கூறியிருக்கிருர்.

செய்தி, வானெலி இலாகாவிற்கான மானியப் பிரரேபணையைத் தாக்கல் செய்து பேசுகையில் அவர் வானெலி நிகழ்ச்சிகளில் செய்யப்பட்டுள்ள அபிவிருத்திகளை பொது மக்கள் வரவேற்கிருர்களென்றும், உத்தியோக நியமனங்கள் சம்மந்தப்பட்ட வேலைகளெல்லாம் முடிந்து விட்டதால், இனிமேல் ரேடியோ நிகழ்ச்சிகளின் 'தரம்' உயர்த்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினுர்.

இம்மானியக் கோரிக்கை மீது கொண்டுவரப்பட்ட எல்லா வெட்டுப் பிரரேபணைகளும் நிராகரிக்கப்பட்டு ரூ. 8 கோடிக்கு மேற்பட்ட இக்கோரிக்கைக்கு சபை அங்கீகாரம் அளித்திருக்கிறது.

மலிவான விலையில் 'ரேடியோ செட்'டுகள் தயாரிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை சர்க்கார் உணர்ந்துள்ளதென்றும், இதற்குச் சாத்தியமான யாவும் செய்யப்பட இருப்பதோடு, கிராமங்களுக்கு 25,000 ரேடியோ செட்டுகளுக்கு மேல் கொடுத்துதவ உத்தேசித்திருக்கிறதென்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிருர்.

1954-ல் இந்தியாவிலிருந்து சுமார் 45 கோடி பவுண்டு தேயிலை ஏற்றுமதியானது.

அணுகுண்டு பரிசோதனைக்கு

ஆஸ்திரேலியாவில் இடம்

கான்பெர்ரா, ஏப். 4—

தென் ஆஸ்திரேலிய பாலைவனம் ஒன்றில் அணு பரிசோதனை நடத்துவதற்கான தளம் அமைத்துக் கொள்வதென, ஆஸ்திரேலிய, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் ஒப்பந்தம் ஒன்றை, நிறைவேற்றியுள்ளதாகத் தெரிகிறது.

இந்த தகவலை, ஆஸ்திரேலிய மந்திரி ஹோவார்டு பில் வெளியிட்டிருக்கிருர்.

இந்த ஆண்டிலேயே, சில பரிசோதனைகள் அங்கு நடைபெறவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

அங்கு அணுகுண்டு வெடிப்பு பற்றிய பரிசோதனைகளே நடைபெறும் என்றும், நீர்வளிக்குண்டு பற்றிய சோதனை நடைபெருது என்றும் அவர் கூறிருக்கிருர்.

மலேயாவில் யுரேனியம்!

கோலாலம்பூர், ஏப். 4—

மலேயாவில் உள்ள பிரேசர் குன்றுகளின் அடிவாரத்தில், யுரேனியம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இது பற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்பு வரவில்லை என்ருலும், நடத்தப்பட்ட பரிசோதனைகள் யுரேனியம் இருப்பதைத் தெரிவித்துள்ளன என்றும், அந்தப் பகுதியில், இதனைத் தோண்டி எடுக்க முயற்சி செய்ய முடியுமா என்பது பற்றி ஆராயப்படுவதாயும் கூறப்படுகிறது.

கோவாவை விடுவிக்க

அறப்போர் மட்டும் போதாது

பம்பாய், ஏப். 4—

கோவா விடுதலைக்கு அறப்போராட்டம் மட்டும் போதுமானதல்ல என்று, டாக்டர் பெர்ஞண்டோ கோஸ்டா என்ற ஒரு கோவா தேசியவாதி குறிப்பிட்டிருக்கிருர்.

இவர் கடந்த 20 ஆண்டுகளாக, போர்ச்சுகல் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் தங்கியிருந்துவிட்டு இப்போதுதான் இந்தியா திரும்பியுள்ளார்.

"போர்ச்சுகல் நாட்டில் எதேச்சாதிகார சர்க்கார்தான் இருக்கிறது. டாக்டர் சலாசார் ஒரு சர்வாதிகாரி; அங்கு மக்களின் அடிப்படை உரிமைகள் சூறையாடப்படுகின்றன.

"இந்தியா, கோவாவில் தேசிய உணர்ச்சி பரவும் பொருட்டு முறையான பிரச்சாரம் செய்ய வேண்டும்; போர்ச்சுகல் வசமிருக்கும் ஆப்பிரிக்கக் காலனிகளிலும் தேசீய உணர்வு பொங்கி எழ வேண்டும்; கோவாவை அமைதியாக விடுவிப்பதற்கு, பொருளாதார முட்டுக்கட்டை போடுதல், ராஜீய உறவுகளை முறித்துக் கொள்ளுதல் ஆகியவற்றையும் இந்திய அரசாங்கம் செய்யவேண்டும்," என்றெல்லாம் அவர் கூறியிருக்கிருர்.

இங்கிலாந்தில் பத்திரிகை வேலை நிறுத்தம்

இரண்டுவார காலமாகநீடிக்கிறது

லண்டன், ஏப். 5—

இரண்டுவார காலமாக இங்கிலாந்தில் நடைபெறும் பத்திரிகைகள் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த ஞாயிற்றுக் கிழமை வரை கூட இதழ்கள் வெளிவரவில்லை. வரும் ஞாயிறன்று கூட நிலைமை இப்படியே நீடிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இங்கிலாந்தில் இப்போது இரண்டே பத்திரிகைகள் மட்டும் வெளியிடப்பட்டன. கடந்த ஞாயிறன்று பர்மிங்ஹாமிலிருந்தும் பிளிமவுத்திலிருந்தும் வெளிவந்தனவாம்.

மக்கள் ஜனநாயகக் கட்சி மக்கள் சோஷலிஸ்டுகட்சியுடன் இணைகிறது

கட்சிக் கொள்கை பிடிக்காது விலகிய கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கை

நெல்லூர், ஏப். 4—

ஆந்திர மக்கள் ஜனநாயகக் கட்சி, இன்றுடன் முடிவடைந்த தனது மாநாட்டில், கட்சியைக் கலைத்துவிட்டு, கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும், மக்கள் சோஷலிஸ்டு கட்சியில் சேர்ந்துவிடுவது என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான தீர்மானம் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியதாம்.

ரதகொண்டா நரசிம்ம ரெட்டி என்பார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினாராம்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன், ம. சோ. கட்சியினருடன் இணைவது பற்றி நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் முடிவாகவே இந்தத் தீர்மானம் இப்போது உருப்பெற்றதாம்.

"கம்யூனிஸ்டு கட்சி, 'மார்க்சிய' வழியில் செல்லவில்லை. அதற்கென சொந்தமான—சுதந்திரமான கொள்கையும் இல்லை. மேலும் இங்குள்ள கம்யூனிஸ்டுகள், ரஷ்யா தவறே செய்வதில்லை என்று கருதுகின்றனர். நாங்கள் மார்க்சியக் கொள்கைகளைப் புறக்கணிக்கவில்லை. ஆனால், ஜனநாயக 'சோஷலிசம்' தேவை என்று கருதுகிறோம்,"

என்று தீர்மானம் பற்றி பத்திரிகையாளருக்கு விளக்கிய நரசிம்ம ரெட்டி கருத்தறிவித்திருக்கிறார்.

1948—50ம் ஆண்டுகளில் கம்யூனிஸ்டு கட்சி நடைமுறையில் கொண்டிருந்த, பயங்கர கலகம் விளைவிக்கும் கொள்கையினைப் பின்பற்ற மறுத்து வெளிவந்த கம்யூனிஸ்டுகளைக் கொண்டு உருவானதுதான், மக்கள் ஜனநாயகக் கட்சி என்பது.

"காங்கிரஸ், தனது சொந்த லாபங் கருதி சோஷலிச சமுதாய கோஷத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், கம்யூனிஸ்டுகளும் மக்களின் சோஷலிச அபிலாஷையை ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டப் பயன்படுத்தப் பார்க்கின்றனர். எனவே, தனிப்பட்டோரின் சுதந்திரங்களுக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் ஒரு ஜனநாயக சோஷலிச சமுதாய அமைப்பில் நம்பிக்கை கொண்ட நாங்கள், ம சோ. கட்சியில் இணைந்துவிட முடிவு செய்கிறோம்," என்று தீர்மானம் கூறுகிறது

பர்மா-சயாம் இரயில் இணைப்பு

சயாம் அரசாங்க திட்டம்

பாங்காங், ஏப். 4—

பர்மாவையும் சயாமையும், போக்குவரத்து, வியாபார அபிவிருத்தி கருதி, இரயில் பாதையால் இணைக்க சயாம் திட்டமிடுவதாகத் தெரியவருகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜப்பானியர்களால், பர்மாவுக்கும் சயாமிற்குமிடையே ரயில் பாதை ஒன்று அமைக்கப்பட்டது. பின், அந்தப் பாதை மூடப்பட்டது. சயாம் அரசாங்க போக்குவரத்து இலாகா, திரும்பவும் அந்த பாதையை புதுப்பிக்கும் நோக்கத்தையே கைவிட்டிருந்தது.

ஜப்பானியர் அமைத்த அந்த இரயில்பாதை 'மரண இரயில்வே' என்று அழைக்கப்பட்டதாம். ஏனெனில், அந்தப் பாதை அமைக்கப்படுகையில் ஏராளமான யுத்தக் கைதிகள் ஜப்பானியரால் கொல்லப்பட்டனராம்.

இப்போது அந்த பாதையைத் தான் புதுப்பிக்க சயாம் திட்டமிடுகிறதாம்.

வியட்னுமில் நெருக்கடி

போலீஸ் படைக்குப் பயமுறுத்தல்

தெற்கு வியட்னுமின் பிரதமரான நிகு-தின்-தியமை எதிர்த்து நிற்கும் 'பின் ஜுயன்' தனிப்பட்ட படையினர், தங்கள் படை எவ்விதத்திலும் தாக்கப்பட்டால், சைகோன் நகரின் மத்தியிலிருக்கும் தெற்கு வியட்னும் போலீஸ் தலைமைக் காரியாலயத்தை வேட்டு வைத்துத் தகர்த்து தரைமட்டமாக்கிவிட இருப்பதாகப் பயமுறுத்துகின்றனராம்.

'இவ்வாறு நடைபெற்றால் மிகப் பெரிய அபாயங்கள் நேரிடும்' என்று அக்காரியாலயத்திற்கு அருகில் வசிக்கும் அமெரிக்க உயர்தர அதிகாரிகளும், அன்னியர்களும் கருத்தறிவித்திருக்கிறார்களாம்.

இந்தக் காரியாலயத்தை கடந்த செப்டம்பரிலிருந்தே:பின் ஜுயன் துருப்புகள்தாம் காவல் செய்து வருகின்றன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது

தங்கள் முற்றுகையை சிறிது காலம் நிறுத்தி வைப்பது என்ற 'பின் ஜுயன்' படையினரின் ஏற்பாடு இன்றுடன் முடிவடைந்து விடுவதால், இனி, மேலும் தவறுமல் தெருச் சண்டைகளும் கலகங்களும் நிகழும் என்று பிரெஞ்சு அதிகாரிகள் கவலையிலாழ்ந்துவிட்டார்களாம்.

பின் ஜுயன் படைகளின் முற்றுகை நிறுத்த ஏற்பாட்டை மேலும் கொஞ்சம் நீடித்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டும், இன்று பகல் வரையிலும் எவ்வித முயற்சிகளும் கைகூடவில்லையாம்.

தற்போது, இந்தப் பின் ஜுயன் படைகளுக்கெதிராகச் சர்க்கார் புதிய போலீஸ் படை ஒன்றைத் திரட்டி வருவதாகவும் தெரியவருகிறது.

போவார்கள்!

உருக்கு ஆலைகள் நிறுவுவது சம்மந்தப்பட்ட தொழில் நுணுக்கப் பயிற்சி பெற 500 இந்தியர்கள் ரஷ்யாவுக்கு அனுப்பப்படுவர் என்றும், இதுபற்றி சர்க்கார், விரைவிலேயே அறிக்கை ஒன்று வெளியிடலாமென்றும் கூறப்படுகிறது.

மனிதப்பண்பு மறைந்தேவிட்டதா?

அடிமைகொள்ளப்பட்ட ஆப்பிரிக்கரின் அவலநிலை

கொடுமை புரியும் வெள்ளைக் கோமான்கள்

"மொத்த மக்கள் தொகையில் 67.5 சதவிகிதம் உள்ள ஆப்பிரிக்க சுதேசி மக்களுக்கு 13 சதவிகித நிலமும், 21 சதவிகிதத் தொகையினரான வெள்ளையருக்கு 87 சதவிகித நிலமும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன—தென் ஆப்பிரிக்காவில்!

"நிலமில்லாத ஏழை ஆப்பிரிக்கர்கள் குறைந்த கூலிக்கு மற்ற ஐரோப்பியர்களிடம் வேலை பார்க்கின்றனர்.

"பல்லாயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் பலபல விதமான சட்டங்களின்கீழ் கைது செய்யப்பட்டு, அக்கைதிகள் ஐரோப்பியரின் பண்ணைகளில் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலான மக்கள்—கறுப்பர்கள்—உழைத்து உழைத்து தங்கள் உயிரையும் துறந்துவிடுகின்றனர். தற்போது இப்படிப்பட்ட 'பண்ணைச் சிறை'களில் 4,500 சுதேசிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

"தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சுதேசிகளின் நிலைமையோ மிக மிகக் கேவலமாக இருக்கிறது.

"அவர்கள் குடியிருக்கும் இடங்களோ சிறைகள் போன்ற முகாம்கள் — அதுவும் பலத்த காவலின் கீழ்!

"இது எல்லாவற்றையும்விட, இந்தக் கைதிகளெல்லோரும் தங்கள் வாழ்நாள் முழுமையும் பிரம்மச்சாரிகளாகவே இருக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்."

இவ்வாறு தென் ஆப்பிரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரான கோட்டேன் என்பவரும், இந்தியர் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரான கச்சாலியா என்பவரும், புதுடில்லியில், தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் அநீதிகளையும், கறுப்பர்களின் அவலநிலை குறித்தும் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டனர்.

"தென் ஆப்பிரிக்க சர்க்காரால் இயற்றப்பட்டிருக்கும் 'இன மண்டலச் சட்டம்' குறிப்பாக இந்தியர் போன்ற ஆசியக் கண்டத்தவரைத்தான் பாதிக்கிறது; அவர்களது உடைமைகளை யெல்லாம் பறிமுதல் செய்துவிட்டு அவர்களை தென் ஆப்பிரிக்காவினின்றும் வெளியேற்றிவிட வேண்டுமென்பதே இச்சட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்," என்று திரு. கச்சாலியா குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், 'சேரி ஒழிப்பு' எனும் பெயரால், ஜோகனஸ்பர்க் நகரிலுள்ள நல்ல வீடுகளிலிருந்தும் இந்தியர் வெளியேற்றப்படுகின்றனர் என்றும், இந்தவிதமாக சுமார் 60,000 இந்தியர் அந்த நகரிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர் என்றும் திரு. கச்சாலியா மேலும் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

புற்றுநோய் பற்றிய பீதி!

புதுடில்லி, ஏப். 4—

"இந்தியாவில் தற்போது மிகப் பெரும் பீதியை அளித்துவரும் புற்றுநோயின் பயங்கர விளைவுகள் பற்றி நாம் அதிகமதிகமாகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று, மத்திய சுகாதார அமைச்சர். ராஜகுமாரி அமிர்தகௌரி அம்மையார் கூறியிருக்கிறார்.

புற்றுநோயின் விளைவாக, இந்தியாவில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 2 இலட்சம் பேர் இறந்து போவதாகவும், மொத்தத் தொகையில் ஆறில் ஒரு பகுதியினர் இவ்வியாதியால் பாதிக்கப்பட்டு தன்புறுவதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஏப்ரல் 10-ந் தேதியன்று, மற்ற இதர நாடுகள் 'புற்றுநோய் தினம்' ஆகக் கொண்டாடுகையில் இந்தியாவும் அதில் கலந்துகொள்ளும் எனக் குறிப்பிட்டிருக்கிறார் அம்மையார்.

எங்கே போவார்கள் காசு தர!

"சென்னை மாநில க்ஷயரோக மருத்துவ மனைகளின் பொருளாதார நெருக்கடி நிலைமை வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது,"

என்று மாநில சுகாதார அமைச்சர் ஷெட்டி, நிருபர்களிடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

"சென்னை மாநிலத்திலுள்ள மொத்தம் 6 க்ஷயரோக மருத்துவ மனைகளிலும் 1 மருத்துவ மனையைத் தவிர, மற்ற ஐந்தும் சர்க்காரால் நிர்வகிக்கப்படாதவை. இவைகளில் பணம் கொடுத்து சிகிச்சை பெறவேண்டிய வார்டுகள் (பகுதிகள்) பெரும்பாலும் காலியாகவே கிடந்து வருகின்றன.

"தற்போதுள்ள இத்தகைய பொருளாதார நெருக்கடியான நிலையில் இப்படிப்பட்ட மருத்துவ மனைகள் எத்தனை காலம் தான் இன்னும் நீடித்து நிலைக்கும் என்பதுதான் இப்போதுள்ள பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இவற்றைச் சர்க்காரே ஏற்றுக்கொள்வதென்பதும் பெரிய ஒரு பொருளாதாரப் பொறுப்பாகிவிடும்."

இவ்வாறு, குறிப்பிட்டுவிட்டு அமைச்சர், இவ்வகை மருத்துவ விடுதிகளின் பல்வேறு பிரச்சினைகளையும் பற்றி ஆலோசிக்க, இவற்றின் இலாகாத் தலைவர்களடங்கிய மாநாடு ஒன்று விரைவிலேயே கூட்டப் பெறும் என்று தெரிவித்திருக்கிறார்.

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
செங்கற்பட்டு	10—4—55	மாலை 2½ மணி	'திராவிட நாடு' அலுவலகம், காஞ்சிபுரம்	அ. பொன்னம்பலனர்
வட ஆற்காடு	10—4—55	மாலை 2 மணி	தி. மு. கழக அலுவலகம், ஆம்பூர்	என். வி. நடராசன்
தஞ்சை	10—4—55	காலை 10 மணி	முசரபுரி பங்களா, மாயவரம்	சத்தியவாணிமுத்து
மதுரை	10—4—55	மாலை 3 மணி	விக்டோரியா எட்வர்டு ஹால், மதுரை	இரா. நெடுஞ்செழியன்
இராமனுதபுரம்	10—4—55	மாலை 3 மணி	நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்	தில்லை வில்லாளன்
நெல்லை	10—4—55	காலை 10 மணி	தி.மு. கழக அலுவலகம், கண்ணம்மன் கோயில் தெரு, நெல்லைச் சந்திப்பு	ஏ. பி. தருமலிங்கம்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

சென்னை மந்திரிசபையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பொன்விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறினர் :—

"சரியான முறையில் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் கல்விப் பயிற்சி தருவதைப் பொறுத்துத்தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் திட்டங்கள் வெற்றி பெறுவதும் இருக்கிறது. அதனால்தான் சர்க்காரும் புதுக் கல்வி முறையை வகுப்பதில் முனைந்திருக்கிறது இப்போது. அனேகமாக இவ்வாண்டிலேயே புதுக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டு விடும்.

"மத்திய சர்க்காரும் கல்வி விஷயம் சம்மந்தமாக விசேட கவனம் செலுத்துகின்றனர்; அவர்களும், திட்டக் குழுவினரைக் கலந்துகொண்டு தேவையான எல்லாவற்றையும் செய்து வருகின்றனர். எப்படியும் இவ்வாண்டிற்குள்ளாக புதுக்கல்வித் திட்டம் உருவாகிவிடும்; அக்கல்வித் திட்டத்தை எதிர்த்தால் நமது இலட்சியம் முன்னேறுது."

மந்திரி சுப்பிரமணியம் கல்வி விஷயத்தில் இவ்வாறு காட்டி வரும் மிதமிஞ்சிய அவசரம் முதன் மந்திரி காமராசருக்குப் பிடிக்காததினல்தான், அவர் சுப்பிரமணியத்திற்கு புத்தி கூறும் வகையில், 'அவசரம்-கூடாது; ஆசிரியரே திட்டம் தீட்ட தகுதியுடையவர்' என்று கூறியதாகவும், தன்னை மட்டந்தட்ட காமராசரால் முடியாது என்ற இறுமாப்புடன், 'அதெப்படி முடியும்? எப்படியேனும் புதியதொரு கல்வி முறையை, வரும் ஜூன் முதல் புகுத்த நான் ஏற்கனவே திட்டமிட்டுவிட்டதை நிறைவேற்றி என் குருநாதரிடத்தில் 'சபாஷ்' பட்டம் பெறுகிறேனா இல்லையா, பாருங்கள்!' என்பது போல அவசர அவசரமாக கல்வித் திட்டமாறுதல்கள் பற்றி அறிவிப்புகள் செய்து கொண்டிருக்கிறார் என்றும், எப்படியும் இந்த ஜூன் திங்களில் முதன் மந்திரி காமராசரும், மந்திரி சுப்பிரமணியமும் மோதிக் கொள்வார்கள் என்றும், இருவரின் வேறுபட்ட கருத்துக்களால், மந்திரி சபையில் பிளவு தவிர்க்க முடியாததாகிவிடக் கூடுமோவென அஞ்சப்படுவதாகவும் நமது தனி நிருபருக்குத் தெரியவந்திருக்கிறது.

கழகக் கூட்டம்

★

8—4—55 அன்று, புஞ்சை புகனூரில் (திருச்சி மாவட்டம்), நடைபெறும். தோழர்கள் ஆ மீ அலிசேக் மன்சூர், டி. பி. மூர்த்தி, வி. கே. இராசு, வை. இரத்தின வேலு, டி. ஆர். முத்துச்சாமி ஆகியோர் பேசுவர்.

பேராசிரியர் 'சுந்தரனர்' நூற்றுண்டு விழா

8—4—55 மாலை 5 மணிக்கு, நாகர்கோவில், வடசேரியில், மனேன்மணி சுந்தரனர் மன்றத்தாரால், பேராசியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் நூருவது பிறந்த தின விழா, திரு. பி. வி. வேலுகந்தப் பெருமாள் தலைமையில், மேற்படி மன்றத்தின்முன் நடைபெறும் தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணம்

7—4—55 காலை 8½ மணிக்கு, சென்னை, பழைய வண்ணாரப் பேட்டை, திருவொற்றியூர் ஹைரோடு, 502-ம் எண்ணுள்ள சத்திரத்தில், தோழர் கி. கணேசன்—தோழியர் ஆ. மீனுட்சி அம்மையார் திருமணம், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர் கலைச்செழியன், தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவர்.

மீர்சாகிப்பேட்டை, அழகிரி நாடக மன்றம் அளிக்கும்

"அத்தான்"

(சமூக நாடகம்)

கதை, வசனம் : எஸ். எஸ். தென்னரசு

பாடல்கள் :

கண்ணதாசன், பூவை. செங்குட்டுவன், இரா. சாரங்கராசன்

பயிற்சி : ஏ. தன்ராஜ்

இடம்? தேதி? எதிர்பாருங்கள்!

ஆதாரக் கல்வி வெற்றிபெறவில்லை!

ஆரம்பக் கல்விக் குழுவிடம் எடுத்துக் காட்டப்பட்டது

"இந்த மாநிலத்தில் ஆதாரக் கல்வித் திட்டம் புகுத்தப்பட்டிருப்பது பற்றி என்னைச் சந்தித்த நெல்லை மாவட்ட ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள், 'அத்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட வெற்றி ஏதும் கிடைக்கவே இல்லை' என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கின்றனர்."

—இவ்வாறு, சென்னை ஆரம்பக் கல்வி விசாரணைக் குழுத் தலைவர் ஆர். எம் அழகப்பா அவர்கள் கூறியிருக்கிறார்.

மேற்படி குழுத் தலைவர் ஆர். எம். அழகப்பா, மற்றும் அக்குழு உறுப்பினர்களும் இத்திங்கள் 1-ந் தேதியன்று, நெல்லை மேற்கு வட்டார, மாவட்டக் கல்வி அதிகாரியின் காரியாலத்தில், பிரதிநிதிகளை சந்தித்திருக்கின்றனர். அவர்களை நெல்லை மாவட்டக் கழகத் தலைவர் கே. இராமசுப்பு, நெல்லை நகர சபைத் தலைவர் பி. அருணுசலம், பாளையங்கோட்டை நகர சபைத் தலைவர் பிஷப் ரெவ. ஏ. ஜி. ஜெபராஜ், செயின்ட் ஜான்ஸ் கல்லூரித் தலைவர் ஜே வேதசிரோமணி, தலைமை ஆசிரியர் சங்கச் சார்பில் திரு. ஜி. சாம்விக்டர், மாவட்ட ஆசிரியர்கள் கில்டின் சார்பில் திரு. அதிசயம் சாமுவேல், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் சந்தித்திருக்கிறார்கள்.

எயிடட் பள்ளிகளையெல்லாம், சர்க்காரே ஏற்று நடத்துவதானல் ஆசிரியர்களுக்கு நிலையான வேலை, குறிப்பிட்ட காலத்தில் ஊதியம் பூராவையும் பெற்றுக் கொள்வது போன்ற நன்மைகள் உண்டாகுமென்றும், ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான பாட புத்தகங்களை சர்க்காரே வெளியிட வேண்டுமென்றும், பொதுவான யோசனைகள் தெரிவித்திருக்கின்றனர்.

'பால் பெருக்கு நாள்'!

பக்தவத்சலம் அறிவிப்பு

"தமிழ் புத்தாண்டுப் பிறப்பு தினத்தை (இத்திங்கள் 14-ந் தேதி) 'பால் பெருக்கு நாள்' ஆகக் கொண்டாட சென்னை சர்க்கார் உத்தேசித்துள்ளது. இம்முறை, குறிப்பாக, கிராமங்களிலுள்ள உற்பத்தியும், கிராம மக்கள் பால் அருந்துவதை அதிகரிக்கச் செய்யும் வகையிலும் மேற்கொள்ளப்படும். அன்று, கிராமங்களிலும் பட்டணங்களிலும் பால் சேகரித்து சின்னஞ் சிறுவர்களுக்கு வினியோகிக்க வேண்டும். மேலும், கறவை மாடுகள் உள்ளவர்களிடையே அதிகப் பால் கறப்புப் போட்டியை நடத்தலாம். பால் வினியோகக் கூட்டுறவுச் சங்கங்களும், பால் விற்பனையாளர் சங்கங்களும் இம்மாதிரியான போட்டிகளையும், ஊர்வலங்களையும், கிராம முக்கியமான இடங்களில் பொதுக் கூட்டங்களும் நடத்தலாம். இவ்விழாக் கொண்டாட்டங்களுக்கு மாவட்டக் கலெக்டர்கள் ஏற்பாடுகள் வேண்டிய அளவுக்குச் செய்து தருவர் நகர்களில், கால்நடை பராமரிப்பு டைரக்டரின் மேற்பார்வையில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறும்"

இவ்வாறு அமைச்சர் பக்தவத்சலனர், தமிழ் புத்தாண்டுப் பிறப்பு தினத்தன்று 'பால் பெருக்கு நாள்' விழா கொண்டாடும்படி கேட்டுக் கொண்டு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

சர்க்கார் கால்நடைப் பண்ணைகளில், அன்று அதிகமாக இருக்கும் பால் முழுவதும் சிறுவர்களுக்கு வினியோகிக்கப்படுமென வும் தெரிவித்திருக்கிறார்.

"கிராமப்புறங்களில் கறவை மாடுகள் ஏராளமாக இருந்தபோதிலும், அங்கெல்லாம், பால் உற்பத்தியும், பால் சாப்பிடும் பழக்கமும் வர வர, பல காரணங்களைக் கொண்டு குறைந்துகொண்டே வருகிறது பிற்கால சந்ததியினரின் தேக நலனைக் கருதியும், பால் பண்ணைகளை நிறுவும் ஆவலைப் புகுத்துவதையும் உத்தேசித்து, சர்க்கார், ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று வகுத்திருப்பதாகவும், கிராமங்களில் மாடுகள் வைத்திருப்பவர்கள், தங்கள் சொந்த உபயோகத்திற்கென பால் உற்பத்தி செய்யவேண்டுமென்பதே அத்திட்டம் என்றும், இது தவிர, நகர்களிலிருக்கும் இளைஞர்களுக்கு ஏராளமான பால் கிடைக்கும்படி செய்வதின் முக்கியத்தை அரசியலார் வற்புறுத்த விரும்புவதாகவும் அவர் மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

டோக்கியோ, —

பார்மோசாத் தீவிலிருந்து ஒரு அமெரிக்க விமானப் படையைக் கொரியாவிற்கு மாற்றிவிட்டு, பார்மோசாவில் வேறொரு புதிய விமானப் படை அனுப்பப்பட்டிருக்கிறதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

இங்கிலாந்தின் ...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திருக்கிறார்.

ஈடன் பிரதமரானதை அங்கீகரிக்கும் பொருட்டு, வரும் மே மாதம் 26-ந் தேதியன்று, நாடெங்கும் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று தெரிகிறது. இது பற்றி ஈடன் ராணியைச் சந்தித்த பிறகு, அதிகார பூர்வமான அறிவிப்பு வெளியாகுமெனத் தெரிகிறது.

இதற்கு முன்னர், சர்ச்சில், கடைசிமுறையாக தனது பிரதமர் நாற்காலியில் அமர்ந்து, தன்னுடைய நீண்ட காலப் பொதுப்பணியில் தன்னுடன் ஒத்துழைத்த தனது சகாக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட காட்சி மிகவும் உருக்கமாயிருந்ததாம்.

இங்கிலாந்து நாட்டின் இருபதாம் நூற்றுண்டுச் சரித காதையின் கதாநாயகனை சர்ச்சில், பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறும் தருணத்தில், நாடெங்கும் பத்திரிகைகள், வேலை நிறுத்தத்தால் வெளிவராமலிருந்தது, பெரும் குறையாகவே மக்களால் கருதப்படுகிறது.

வழக்கம்போல பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்குமானல் எத்தனையோ எண்ணற்ற முறைகள், 'கொட்டை எழுத்துச்செய்தி' களுக்கு ஆளான சர்ச்சிலுக்காக, பல விசேஷ இதழ்கள் வெளியிட்டிருக்குமாம்.

இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள பிரதமர் பதவி மாற்றத்தால், வெளிநாட்டுக் கொள்கைகளோ மற்றெவையோ, எவற்றிலும் மாற்றம் இருக்காது என்று கூறப்படுகிறது.

இங்கிலாந்து, தனது அருமருந்தன்ன மைந்தன் ஒருவரின் பணியினை முழுஅளவு பயன்படுத்திப் புகழ் தேடிக் கொண்டிருக்கிறது.

விரல் நசுங்கினதற்கு நஷ்டஈடு ரூ. 20,000

சென்னை, ஏப். 5—

இரயில் வண்டிப் பெட்டியின் ஜன்னல் கதவொன்று விழுந்து கைவிரல் சேதமுற்றதாக டாக்டர் பி. வி. செரியன், தென் பிராந்திய இரயில்வேயிடம் ரூ. 20,000 நஷ்டஈடு கோரி நோட்டீஸ் அனுப்பியிருக்கிறாராம்.

சென்ற திங்கள் 20-ந் தேதியன்று டாக்டர் பி. வி. செரியன் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் பாஸ்ட் பாசஞ்சர் வண்டியில் சிதம்பரத்துக்குப் பிரயாணம் செய்தார். அன்று, மாநில முதலமைச்சர் காமராசரும் அவ்வண்டியில் பிரயாணம் செய்தாராம். பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த மக்கள், முதலமைச்சரைக் காண்பதற்காக டாக்டர் செரியன், அவர்கள் உட்கார்ந்திருந்த பெட்டியின் ஜன்னல் கதவைத் தூக்கும்போது, அது தவறி அவரது வலதுகையில் விழ, அவரது நடு விரல்கட்டை நசுங்கிவிட்டதாம்.

சிதம்பரம் சென்று திரும்பிய டாக்டர் சென்னை வந்ததும், வழக்கறிஞர் ஒருவர் மூலமாக ரூ. 20,000 நஷ்டஈடு கோரி, இரயில்வே அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்.

ஏழைகளுக்கு சர்க்கார் புறம்போக்கு நிலங்கள்

சேலம், ஏப். 4—

ஆத்தூர் தாலுகாவில் சுமார் 80,000 ஏக்கர் சர்க்கார் புறம்போக்கு நிலங்கள், சென்ற திங்கள் இறுதிவரையில் சுமார் 9000 ஏழைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாம் இன்னும் ஏழைகளுக்கு ஒதுக்குவதற்கென சுமார் 4,500 ஏக்கர் நிலம்தான் உள்ளதெனவும், அவைகளை ஏழைகளுக்கு ஒதுக்கித் தருகின்ற வேலைகள் யாவும் இன்னும் ஒருசில வாரங்களுக்குள்ளாக நடைபெற்று முடிவடைந்துவிடுமென்றும் சேலம் மாவட்டக் கலெக்டர் பி. சபாநாயகம் தெரிவித்தார்.

இந்திய நாணயத்தில் தசாம்ச முறை?

இந்திய நாணயங்களை தசாம்ச பின்ன முறையில் மாற்றி அமைப்பதென்ற திட்டம் பற்றி, இந்திய சர்க்கார் வெகுவிரைவிலேயே ஒரு முடிவுக்கு வருவரெனவும், தற்போது இத்திட்டம் திட்டக் குழுவின் பரிசீலனையிலிருந்து வந்தாலும் எப்போது அமுல் செய்யப்படும் என்று தெரிவிக்க முடியாதெனவும், ரெவின்யூ, பாதுகாப்புச் செலவு அமைச்சர் குகா, டெல்லி பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார்.

டெல்லி ஆதிபத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். சீனிவாச அய்யங்கார், "இந்த இரயில் பாதைக்கான திட்டம், ஏற்கனவே ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்று கூறிய இந்திய அரசாங்கம், இதுவரை சேர்த்துக் கொள்ளவில்லை," என்று கூறியிருக்கிறார்.

"வட இந்தியாவில் இரயில்வே அபிவிருத்தியில் குறிப்பிடத் தகுந்த வேலைகள் நடைபெற்றிருந்தும், தென்னிந்தியாவில் அத்தகு அபிவிருத்தி வேலைகள் நடைபெறவே இல்லை. இந்திய இரயில்வே படம் ஒன்றைக் கவனித்தால் இந்த உண்மை நன்கு புலப்படும்," என்று, என். ஹட்ச் மஸ்தே கவுடா என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எதிர்க் கட்சித் தலைவரான, ஜே. முகம்மது இமான் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"யூனியன் அரசாங்கக் கொள்கையால், மைசூர் மாநிலம் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறது;

"இந்திய இரயில்வேயுடன், மைசூர் இரயில்வே இணைக்கப்பட்டதால், மாநிலத்தின் முன்னேற்றம் தடைபட்டது;

"சில அங்கத்தினர்கள், தென்னிந்திய மக்களின் அபிலாஷைகளையும் டெல்லி அரசாங்கம் அலட்சியம் செய்வதாகக் கூறினர். நான் இதனை ஒப்புக்கொள்கிறேன்.

"இந்தப் பகுதி மத்திய அரசாங்கத்தால், பூரணமாக அலட்சியப்படுத்தப்பட்டிருப்பது உண்மையே.

"எனவே, மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்துடன் போராடி இந்த திட்டம் நிறைவேறச் செய்ய வேண்டியது அதன் தலையாய கடமையாகும்."

காஞ்சி கலை விழா

"ஏழை மாணவர்களுக்கு கல்வித் துறையில் உதவ இதுபோன்ற கலை விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவைகளின் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தைக் கொண்டு படிக்கும் மாணவர்கள் தங்கள் கல்வி முடித்து வேலைக்கு அமர்ந்து, ஊதியம் பெறுங்காலை, தாங்கள் கல்விக்கென கடன் பணம் வாங்கினதாக இத்தொகைகளைக் கருதி திரும்பக் கொடுத்துவிட்டால் அது மற்ற மாணவர்களுக்கு பெரும் உதவி செய்வதாகும்.

"இது தவிர, மதம், அரசியல் நோக்கமெதுவுமில்லாமல் கலை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு கலைத் துறையை வளர்ப்பதற்காகவும் நிதி ஒதுக்கிவைக்க வேண்டும்."

—இவ்வாறு, 30—3—55 இரவு 10½ மணியளவில், காஞ்சீபுரம் கண்ணன்டாக்கீஸ் மைதானத்தில் அமைக்கப்பட்ட மேடையில், செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் திரு. லோபோ பிரபு அவர்கள், கலைவிழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அன்று இரவு, தோழர் எஸ்.எஸ். இராசேந்திரன் நாடக மன்றத்தாரால் 'மகாராணி' — நாடகம் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.